[1978 செப்டம்பர் 11

இணைப்பு III

168 ம் பக்கத்திலுள்ள உடுக்குறியிடாத வினா எண் 332 க்கான விடையைக் காண்க.]

விடை

(அ) புதுக்கோட்டை மாவட்டம் திருவரங்குளம் ஊராட்சி ஒன்றியத்திலுள்ள வாம்பன் பயறு வகை ஆராய்ச்சி நிலையத்தை யொட்டி உள்ள 1000 ஏக்கர் நிலப்பரப்பில் ஒரு பெரும் (G ant பழத் தோட்டம், ரூபாய் 12.25 இலட்சம் செலவில் அரசு ஒப்பளிப்புடன் 21-10-77 முதல் அமைத்து செயல்பட்டு வருகிறது.

(ஆ) பெரிய அளவில் பழத் தோட்டங்கள் அமைக்கும் திட்டம் இதுவரை தமிழகத்தில் செயல்படுத்தியது கிடையாது. மா, பலா, எலுமிச்சை, கொய்யா போன்ற பழங்களின் உற்பத்தியைப் பெருக்கி ஏழை மக்களுக்கு நிறைய பழங்கள் குறைந்த விலையில் கிடைக்கச் செய்யவும், வேளாண் மக்களுக்குத் தரமான பழக் கன்றுகள் கிடைக்கவும் வறண்டு கிடக்கும் பயனற்ற நிலங்களை உபயோகப்படுத்தி நல்லூதியம் தரும் பழத் தோட்டங்களைப் பெரும் பரப்பில் உண்டாக்குவதுமே இத் திட்டத்தின் சீரிய குறிக்கோளாகும்.

இதுவரை இந்தப் பழப் பண்ணைக்கு எடுத்துக் கொள்ளப்பட்ட 671 ஏக்கர் நிலங்களில் 443 ஏக்கர் நிலங்கள் திருத்தியமைக்கப் பட்டு பயிரிடத் தகுதி வாய்ந்ததாக மாற்றப்பட்டுள்ளன. ஏற்கனவே 58 ஏக்கர் நிலப்பரப்பில் 43,000 ஒட்டு ரக நீலம், பங்களூரா, பங்கனப்பள்ளி, செந்தூரா, பீத்தர் போன்ற மாஞ்செடி வகைகள் நடப்பட்டு பராமரிக்கப்பட்டு வருகின்றன. சுமார் 200 ஏக்கர் பரப்பில் மண்வளப் பாதுகாப்பு ஏற்கனவே செய்யப் பட்டுள்ளது. இப் பண்ணையில் செயல் திட்டங்கள் படிப்படியாக விரிவடைந்து இத்திட்டக்கால இறுதிக்குள் அது 1000 ஏக்கர் பரப்பளவு கொண்டதாகவும் மிகவும் பயன் தருவதாகவும் அமையும். ஐந்து வருடங்களுக்குப் பின இப் பண்ணையின் மூலம் ஆண்டுதோறும் ரூபாய் 10 இலட்சமும், 10 வருடங்களுக்குப் பிறகு ஆண்டுதோறும் ரூபாய் 20 இலட்சமும் வருவாய் வரும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

இப்பண்ணையில் பணிபுரியும் பணியாளர்களுக்குக் குடியிருப்பு வசதிக்காகவும், கிடங்குகளுக்காகவும் ரூபாய் 2 இலட்சம் மொத்த வரவு செலவு மதிப்பீட்டின் கீழ் அரசு ஆணை வழங்கியுள்ளது.